# இயக்குநர் மணிரெத்தினத்தின் திரைப்படங்களில் அடிக்கருத்துக்கள்

**திரு. யூட் டினேஸ் கொடுதோர்**
ஊடகக் கற்கைகள்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
sdineshkodi@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்:**

மணிரெத்தினம் தமிழ் சினிமாவில் மிகவும் முக்கியமான ஓர் இயக்குனர். இவரது சிறந்த கதை அமைப்பு மற்றும் கதைத் தெரிவு என்பன இவருக்கு இந்திய சினிமாவில் தனி இடத்தினை அமைத்துக் கொடுத்துள்ளது. கடினமாக காணப்பட்டதினை களத்தில் இறங்கி சாதாரணமாக மாற்றி திரையில் வலம்வரச் செய்யும் விதமாகத் திரைப்படங்களினை அமைப்பதே இயக்குனர் மணிரெத்தினத்தினை பல விருதுகளைப் பெற வழிவகுக்கின்றது. இயக்குனர் மணிரெத்தினம் பார்வை ஏனைய இயக்குனரின் பார்வையினைவிட வேறுபட்டதாகவும், புதுமையானதாகவும் காணப்படுகின்றது. இவரின் திரைப்படங்கள் வெற்றிப்படங்களாகவும், சாதனை புரியும் திரைப்படங்களாகவும் அமைவதற்கு அடிப்படையாக அமைவது அவரின் அடிக்கருத்துக்களாகும். ஓர் அடிக்கருத்தினை எடுத்து அதற்குக் களம் அமைத்து, அதற்கு உயிர் ஊட்டி இசையில் நனைத்துப் பார்வையாளர்களுக்கு ஓர் சிறந்த கலையாகத் திரைப்படத்தை வழங்குபவர் மணிரெத்தினம். இவர் தனது திரைப்படங்களினை உருவாக்குவதற்கு எத்தகைய அடிக்கருத்துக்களை எடுக்கின்றார்? எந்தப் பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டு அடிக்கருத்துக்களை அமைக்கின்றார்? அடிக்கருத்துக்கள் தாங்கி வரும் விடயம் என்ன? என்ற கேள்விகளுக்கு விடை காண்பதே இந்த ஆய்வின் நோக்கமாக அமைந்துள்ளது. இந்த ஆய்வின் எல்லையாக மணிரெத்தினத்தின் அனைத்துத் தமிழ்த் திரைப்படங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஓர் திரைப்படத்தின் தலைமைக் கருத்தே அதன் அடிக்கருத்தாக அமைகின்றது. அதன் அடிப்படையில் திரைப்படங்கள் உருவாக்கப்படுகின்றன. கதை அமைப்பும், அதன் அடிப்படையிலே எழுதப்படுகின்றது. அந்தவகையில் இந்த ஆய்வானது ஒப்பீட்டாய்வு, பகுப்பாய்வு, விபரண ஆய்வு முறையியல்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இயக்குனர் மணிரெத்தினத்தின் திரைப்படங்களின் அடிக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வின் மூலாதாரமாக மணிரெத்தினத்தின் தயாரிப்பில் உருவான பத்தொன்பது தமிழ்த் திரைப்படங்கள் மட்டும் எடுத்தாளப்பட்டுள்ளன. இரண்டாம்நிலைத் தரவுகளாக இந்த ஆய்வுப் பொருண்மையோடு தொடர்புடையதான நூல்கள், ஆய்வு நூல்கள், கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் சஞ்சிகைகளும் அமைகின்றன. இந்த ஆய்வினூடாகத் தமிழ் சினிமாவின் அடிக்கருத்துக்களை அறிந்து கொள்ள முடிவதோடு அது செல்ல வேண்டிய திசை வெளியையும் அறிந்து கொள்ள முடியும் எனலாம். இந்த ஆய்வின் கருதுகோளாக இயக்குனரின் திரைப்படங்கள் வெற்றிபெற அடிக்கருத்துக்களே காரணமாக அமைகின்றன. எனவே இது பற்றி ஆராய வேண்டியது அவசியமானது. இயக்குனர் மணிரெத்தினம் நட்பு, காதல், அரசியல் குடும்பம் மற்றும் சமுதாயம் போன்ற அடிக்கருத்திலிருந்தே திரைப்படங்களை அமைக்கிறார். அடிக்கருத்துக்களே சிறந்த கதைக்களங்கள் உருவாகக் காரணங்களாக உள்ளன, ஓர் திரைப்படத்தின் தலைமைக் கருத்தே அதன் அடிக்கருத்தாக அமைகின்றது. தமிழ்த் திரைப்பட இயக்குனர் மணிரெத்தினம் திரைப்படங்களின் அடிக்கருத்துக்கள் குறித்து அதிக முக்கியத்துவம் செலுத்துகிறார் போன்றன இந்த ஆய்வின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

***பிரதான சொற்பதங்கள்**: மணிரெத்தினம், திரைப்படம், அடிக்கருத்து*

## 1.0. ஆய்வு அறிமுகம்

தற்காலத் திரைப்படங்கள் அதன் பார்வையாளர்கள் மத்தியில் இரண்டறக் கலந்த ஓர் ஊடகமாகக் காணப்படுகின்றது. திரைப்படங்கள் தனது பார்வையாளர்களுக்குக் கருத்தினையும் அதேவேளை பொழுது போக்கினையும் ஒருங்கே மேற்கொள்கின்றன. திரைப்படங்கள் கருத்துப்பரம்பலினை மிகவும்

விரைவாகவும், வலுவாகவும் ஏற்படுத்துகின்ற ஊடகம் எனலாம். அந்தவகையில் அடிக்கருத்துக்களே ஒரு திரைப்படம் உருவாகி மக்களுக்குக் கருத்தினையும், பொழுதுபோக்கினையும் வழங்கத் துணை புரிகின்றது.

திரைப்படம் என்ற பிரபலமான ஊடகமானது பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய ஒன்றாகும். கதை, களம், திரைக்கதை, காட்சி, வசனம், கலை, இயக்கம், ஒளிப்பதிவு, ஒலி அமைப்பு, கதாபாத்திரங்கள், நடிப்பு, படத்தொகுப்பு, நெறியாளர் ஆற்றல், ஆடைவடிவமைப்பு, தொழில்நுட்பம், மொழிநடை, நடன இயக்கம், இசை, பாடல் மற்றும் சண்டைக்காட்சி போன்ற பல்வேறு அம்சங்கள் திரைப்படங்களில் உள்ளடங்குகின்றன. அந்தவகையில் இவை அனைத்திற்கும் அடித்தளமாய் இருந்து அப்படத்தை இயங்கச் செய்வது திரைப்படத்தின் அடிக்கருத்துக்கள் எனலாம்.

கதையின் இடம்பெறும் நிகழ்ச்சிகளுக்கேற்ற பின்புலச் சூழலை கலை இயக்குனர் உருவாக்குகின்றார் கதை நிகழ்ச்சிகள், படப்பிடிப்புக்கள், படபிடிப்புக் கூடத்திலும் அதற்கு வெளியேயும் இடம் பெறுவதுண்டு.திரைப்படத்தின் அனைத்து செயற்பாடுகளுக்கும் அடித்தளமாய் விளங்குவது அத்திரைப்படத்தின் அடிக்கருத்தாகும்.

**1.1. சினிமா**

மனிதகுலம் இதுவரை கண்ட முக்கியமான மக்கள் தொடர்புச் சாதனங்களில் திரைப்படங்கள் மிகவும் முக்கியமானவையாக காணப்படுகின்றன. ‘‘கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்’’ என்ற பழமொழி போய்த் ‘‘திரைப்படக்கொட்டகை இல்லா ஊரில் வாழ வேண்டாம்’’ என்ற புதுமொழி நடைமுறைக்கு வந்துவிட்டது.

சினிமா பற்றி அகராதிகள் கூறும் விளக்கத்தினை இங்கு குறிப்பிடுவது சாலச்சிறந்தது.

> 1) A thin flexible strip of light –sensitive material for photos or motion pictures
> 2) A story or event recorded by camera and shown in a cinema or on television"[1]

என்று oxford ஆங்கில அகராதி பொருள் கூறுகிறது. அதேவேளை ‘‘கதையின் அடிப்படையில் அமைந்த காட்சிகளைக் கலையம்சத்தோடு புகைப்படச் சுருளில் பதிவு செய்து திரையில் காட்டுவது – சினிமா’’ [2] க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி பொருள் தருகின்றது.

சினிமா என்பது கலையம்சத்தோடு கூடிய பொழுதுபோக்கு அம்சம் என்பதினை தாண்டி பல புதிய சிந்தனைகளை பார்வையாளர்கள் மத்தியில் விதைக்கும் ஓர் பாரிய ஊடகமாகவும் செயற்படுகின்றது. சினிமா ஒரு கூட்டு முயற்சியினால் உருவாகும் ஒரு கதை இதில் தயாரிப்பாளர், இயக்குனர், நடிகர்கள், துணைநடிகர்கள், இசையமைப்பாளர்கள், பாடலாசிரியர்கள், ஒளிப்பதிவாளர்கள் எனப் பலரைக்குறிப்பிடலாம். ஊர்கூடித் தேர் இழுப்பது போல திரைப்பட ஆக்கத்தில் பலர் பணியாற்றுகின்றனர்.

வசன இலக்கியத்தில் கட்டுரை, கவிதை, புதினம் போன்ற பல வகைகள் காணப்படுகின்றது, அது போலத் திரைப்படங்களிலும் பல வகைகள் உள்ளன. அவை

1) கதைத ் திரைப்படம் - Feature Film
2) கட்டுரைத் திரைப்படம் - Documentary Film

3) கட்டுரைக் கதைத் திரைப்படங்கள்- Docu Frama Films
4) கல்வித் திரைப்படங்கள் - Educational Films
5) செய்தித் திரைப்படங்கள்- - News Magazine films
6) விளம்பரத் திரைப்படங்கள் - Advertisement Films

என திரைப்படத்தின் வகைகளினை ஆறு வகைகளாக பிரித்து நோக்கமுடியும்.

**1.2 இயக்குனர் மணிரெத்தினம்.**

சுருக்கமான வசனம், நேர்த்தியான தொழில்நுட்பம், புதுமையான கதை அமைப்பு போன்றவற்றால் சினிமாவில் தனக்கென தனி இடத்தினை பிடித்தவர் இயக்குனர் மணிரெத்தினம். இவர் தென்னிந்திய திரைப்பட இயக்குனர். இவர் 1946 ஜீன் மாதம் 2ஆம் திகதி மதுரை, தமிழ் நாட்டில் பிறந்தார். இவரின் இயற்பெயர் கோபாலரட்ணம் சுப்பிரமணியம் ஐயர். இவர் 1983 ஆம் ஆண்டு கன்னட மொழியில் பல்லவி அனுபல்லவி என்னும் திரைப்படத்தினை இயக்கி தனது சினிமா பயணத்தினை ஆரம்பித்தார். இயக்குனர், தயாரிப்பாளர், திரைக்கதை ஆசிரியர் என பல துறைகளில் தன்னை ஈடுபடுத்தி வருகின்றார். இவர் 1983 ஆம் அண்டு தொடக்கம் 2016 வரை இருப்பதாறு படங்களை (26) இயக்கியுள்ளார். தமிழினை தாண்டி மலையாளம், தெலுங்கு, கன்னடம் மற்றும் ஹிந்தி போன்ற மொழிகளிலும் திரைப்படங்களை இயக்கியுள்ளார்.

சினிமாத் துறையில் பல வெற்றிப் படங்களை உருவாக்கியவர் இயக்குனர் மணிரெத்தினம் இவரது திரைப்படத்தின் வெற்றியே கதை சொல்லும் பாணியிலே தங்கியுள்ளதினை அவதானிக்கமுடியும். இவரது படங்களின் பாத்திரங்களின் வாய்மொழியை விட காட்சி மொழியே நிறைய விடயங்களைச் சொல்வதினை அவரது திரைப்படங்களில் காணமுடியும். இவர் தனது திரைப்படங்களில் இடம்பெறும் ஒளிப்பதிவு, இசையமைப்பு, படத்தொகுப்பு, போன்றவற்றில் தேர்ச்சி பெற்ற கலைஞர்களை கொண்டே அமைக்கிறார்.

**1.3 அடிக்கருத்து**

திரைப்படத்தில் நடிப்பு, பாடல், இசை எனப் பல்வேறு கூறுகள் இடம்பெற்றாலும் கதை முதன்மையாக வேண்டப்படுகின்றன. கதை என்பது நிகழ்ச்சிகள் பலவற்றின் பின்னலாக ஒரு மையக்கருத்தை அல்லது அடிக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு அமைவதாகும். திரைப் படத்தின் கூறுகளாக கருப்பொருள், கதைப்பின்னல் பாத்திரப்படைப்பு முதலியனவும் தொழில்நுட்ப உத்திகளும் அமையும். கதைக்கரு கதையினுடைய மையக்கருத்தின் சுருக்கமான கூற்றே ஆகும். ஒரு திரைப் படத்தின் கதைக்கருவை வெளிப்படுத்த அதன் கதைப் பின்னல், பாத்திரப்படைப்பு, தொழில்நுட்பம் மற்றும் வசன அமைப்பு போன்றன உறுதுணையாக அமைகின்றன.

அடிக்கருத்து அல்லது கரு என்ற சொல் தீமா (Thema) கிரேக்கச் சொல்லிலிருந்து உருவானதாகும். கிரேக்கத்தில் முதல் முதலில் எழுத்துக் கலையுடன் தொடர்புடையதாக இச்சொல் பயன்படுத்தப்பட்டது. இலத்தீன் மொழியிலான உரையாடலில் அமையும் விவாதத்தைச் சுட்டும் சொல்லாக இது இருந்தது. பிரேஞ்சு மொழியில் வேற்று மொழியில் மொழிபெயத்த முக்கியமான பகுதியைத் ''தீம்'' என்ற பதத்தால் அழைத்தனர். கதைக்கருவே ஒரு படைப்பில் வாசகருக்கு அல்லது பார்வையாளர்களுக்கு வலியுறுத்திக் கூறுமாறு அமைக்கப்பட்ட ஒரு தலைமைக்கருத்து அல்லது அடிக்கருத்து ஆகும். கதைக்கரு ஒரு படைப்பிலக்கியத்தில் அடிப்படையில் பேசப்படும் பொருள். அது மறைமுகமாகவோ, நேரடியாகவோ வெளிப்படுத்தப்படும் அதன் மையக்கருத்தே ஆகும். திரைப்படத்தில் இடம் பெறும் காட்சிகள் கருத்தினை வெளிப்படுத்தும் பொருட்கூறுகளாக அமைந்து கதைக்கருவிற்கு வலிமை சேர்ப்பனவாக அமைகின்றன.

எந்தவொரு படைப்பிற்கும் அடிக்கருத்து என்பது முதன்மையாக வேண்டப்படும் ஒன்றாக உள்ளது. அந்த வகையில் திரைப்படங்களுக்கும்

அடிக்கருத்து என்பது மிகவும் அவசியமான ஒன்றாகும் அதனை மையப்படுத்தியே ஏனையவைகள் அமைக்கப்படுகின்றன.

## 1.4 மணிரத்தினமும் அடிக்கருத்தும்

இயக்குனர் மணிரத்தினம் 1983ஆம் ஆண்டு தொடக்கம் 2016 வரை தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு மற்றும் ஹிந்தி போன்ற மொழிகளில் மொத்தம் 26 படங்களினை இயக்கியுள்ளார். இதில் 20 தமிழ் படங்களாகும். இவற்றுள் ஐந்து படங்கள் தேசிய விருது பெற்ற திரைப்படங்களாகும்.

ஒரு கதை எதனைச் சொல்ல வருகிறதோ அல்லது அதன் தலைமைப் பண்பு ஏதுவோ அதைக் கதைக்கரு, தலைமைக்கருத்து, அடிக்கருத்து என்பர். இயக்குனர் தனது திரைப்படங்களில் ஐந்து விடயங்களை மையப்படுத்தி அடிக்கருத்தினை அமைத்துள்ளார். அவரின் திரைப்படத்தில் இடம் பெறும் காட்சிகள் கருத்தினை வெளிப்படுத்தும் பொருட்டு கூறுகளாக அமைத்து கதைக்கருவிற்கு வலிமை சேர்ப்பனவாக அமைந்திருக்கும்.

### 1.4.1 காதல்

உலகில் உயிரினங்கள் உண்டான காலந்தொட்டுப் பயின்று வரும் காதல் ஒழுக்கம் இலக்கியங்களிலும் பிற கலைகளிலும் பரவலாகப் படைத்துக் காட்டப்பட்டுள்ளது. அந்த வகையில் மனிதனின் உணர்வுகளின் ஒன்றான காதலினை இயக்குனர் மணிரெத்தினம் தமது படங்களில் அடிக்கருத்தாகக் கொண்டுள்ளார்.

“மனித வாழ்க்கையின் சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் அடிப்படையில் அது ஒரு காதல் கதை என்பது புலனாகும்.” என்கிறார் ஸ்டான்லி ஹால் வயது வந்த (Matured) ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையே மலரும் பாலியல் சார்ந்த அன்பு காதல் ஆகும்.

காதல் சார்ந்து வெளிவரும் திரைப்படங்கள் இருதலைக் காதல், ஒரு தலைக்காதல், முக்கோணக் காதல் பொருந்தாக்காதல், காவியக்காதல் என பிரித்து அடிக்கருத்துக்களை அமைகின்றன. இயக்குனர் மணிரெத்தினம் எட்டு (08) தமிழ் திரைப்படங்களினை காதலினை அடிக்கருத்தாக்க கொண்டு இயக்கியுள்ளார்.

1. ஒகே காதல் கண்மணி
2. அலைபாயுதே
3. இருவர்
4. திருடா திருடா
5. இதயத்தை திருடாதே
6. மௌனராகம்
7. இதயக்கோவில்
8. பகல்நிலவு

இவர் 1)காதல் தோன்றும் சூழல்கள். 2)காதல் வெளிப்படுத்தப்படும் விதம் 3) காதலில் உள்ள பிரச்சினைகள் மற்றும் ஒன்றுசேரும் விதம் என மூன்று நிலைகளில் பிரித்து கதையினை அமைக்கின்றார்.

இவரின் காதலினை அடிக்கருத்தாகக் கொண்ட திரைப்படங்களில் முதல் சந்திப்பு, தொடர்ந்து வரும் உறவுமுறை கடமையுணர்வு, களங்கமற்ற மனம், அன்பும் அழகும் ஒரே இடத்தில் பணிபுரிதல், உதவி செய்தல், துணிவு, ஒரே இடத்தில் படித்தல் போன்றன காதல் தோன்றுதலுக்கான காரணங்களாக இவர் காட்டுகின்றார்.

**முதல் சந்திப்பு** – அலைபாயுதே
**அன்பும் அழகும்** - ஓகே காதல் கண்மணி

இவர் காதல் வெளிப்படுத்தும் விதத்தினை நான்கு பிரிவுகளாக பிரித்து காட்டுகின்றார்.

1) தோழி வெளிப்படுத்தல்.
2) தோழன் வெளிப்படுத்தல்.
3) காதலன் வெளிப்படுத்தல்.
4) காதலி வெளிப்படுத்தல் போன்றனவாகும்.

பின்னர் காதல் சேர்வதில் உள்ள சிக்கலும் ஒன்று சேர்தலும் என்றும் பகுதியில் பொருளாதாரம், ஏற்றத்தாழ்வு மதம், சாதி, உறவுமுறைப் பகை போன்றனவற்றினை அடிப்படையாகக் கொண்டு திரைப்படங்களினை அமைக்கின்றார். வேறு அடிக்கருத்துக்களை கொண்ட திரைப்படங்களிலும் காதல் சார்ந்த விடயத்தில் இவற்றினையே கடைப்பிடிக்கிறார்.

**பம்பாய்** - சமுதாயத்தினை அடிக்கருத்தாக கொண்ட இத்திரைப்படம். இத்திரைப்படத்தில் காதல் சேர்வதில் மதம் பிரச்சினையாக அமைந்தது.

### 1.4.2 குடும்பம்

மனிதன் விலங்கு நிலையிலிருந்து நாகரிக நிலைக்குழு மாறியமைக்கு அடிப்படையாக அமைந்தது குடும்பம் என்ற நிறுவனமாகும். குடும்பம் என்ற அமைப்பின் மீதுதான் பிற சமுதாயக் கட்டுமானங்கள் நிறுவப்பெறுகின்றன.

சமூக அமைப்பின் அடித்தளம் குடும்ப உறவுகள்தான் அதற்கே உரிய மனிதநேயம், மனித உறவின் நெருக்கம், பிரிவு, பெருமை, உரிமை, ஆகிய உணர்வுகள் அடங்கிய கதாபாத்திரங்களில் ஒரு கதாபாத்திரம் செய்யும் அந்தக் கதப்பாத்திரத்தை முதன்மையாக்க கொண்டு அமைவதுதான் குடும்பத்திரைப்படம் எனலாம்.

இயக்குனர் மணிரெத்தினம் தனது அனைத்து படங்களிலும் குடும்பத்தின் முக்கியத்துவத்தினை விளக்கியுள்ளார். இயக்குனர் தனது தமிழ் திரைப்படங்களில் இரண்டினை குடும்பத்திரை அடிக்கருத்தாகக் கொண்டு அமைத்துள்ளார்.

1) அஞ்சலி 1990

2) அக்கினி நட்சத்திரம் 1988

கணவன் - மனைவி உறவின் பெருமை, தந்தை மகன் உறவில் உள்ள நிலை, அண்ணன் தம்பி பாசம், மூத்தவளாகப் பிறந்தவனின் நிலை, தாய் பிள்ளை உறவின் நிலை போன்றவற்றினை இவர் அடிப்படையாகக் கொண்டு திரைக்கதையினை அமைத்துள்ளார்.

1) கணவன் மனைவி உறவு – அஞ்சலி
2) அண்ணன் தம்பி உறவு – அக்கினி நட்சத்திரம்.

### 1.4.3 சமுதாயம்

மக்கள் கூடிவாழும் அமைப்பைச் சமுதாயம் என்பர். அதில் உருவாகும் இலக்கியம், ஓவியம், ஆகிய படைப்பிலக்கியக் கருவிகளைக் கொண்டு மக்களின் வாழ்க்கை நிலை, பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றை அறியலாம்.

சமுதாயப் பின்னணிதான் இலக்கியப் படைப்பாளனை இயக்குகின்றது. எந்த ஒரு படைப்புச் சமுதாயத்தைத் தவிர்த்துத் தோன்ற முடியாது. இலக்கியம் என்பது ஒரு சமுதாய வெளிப்பாடு ஒரு சமுதாயத்தின் விருப்பு, வெறுப்பு, நம்பிக்கை, முதலியவற்றை வளர்த்து பயன்படுத்துவது இலக்கியமே. அதுவே மனித வாழ்க்கையைப் பெரிதும் மாற்றியமைக்கின்றது.

இயக்குனர் மணிரெத்தினம் சமுதாயம் சார்பாக உருவாக்கிய படங்கள், அவரின் சமுதாயம் மீதான பார்வையின் ஆழத்தினை புலப்படுத்துகின்றது. சமூகத்தில் காணப்படும் சாதிப்பிரச்சினை, மதப்பிரச்சினை, இனக்கலவரம். தொழிலாளர் பிரச்சினை, மீனவர் பிரச்சினை, ஊர்க்கலவரங்கள், போன்றவற்றினை அடிப்படையாக கொண்டு திரைப்படங்களை இயக்குனர் இயக்கியிருக்கின்றார்.

- **மீனவர் பிரச்சினை** – நாயகன்

இயக்குனர் சமூகத்தினை அடிக்கருத்தாகக் கொண்டு இரண்டு திரைப்படங்களினை இயக்கியுள்ளார்.

### 1.4.4. அரசியல்

சமூகத்தில் பொது ஒழுங்கை நிலைநாட்டுவது வர்க்கங்கள் மற்றும் சமூகக் குழுக்கள் ஆகியவற்றின் அனைத்து நலன்களையும் ஒரே மாதிரியாக் கணிப்பது அரசு ஆகும். இவ்வரவு தனி மனிதன், குடும்பம், கூட்டுக்குடும்பம் என்னும் படிநிலையில் அமைகிறது. பெரும்பாலும் பொருளாதாரம் என்ற கட்டுமானத்தின் அடிப்படையிலே அமைந்துள்ளது. அரசு என்பது சமூகத்தினின்றும் படிப்படியாகத் தோன்றியது.

தமிழ் திரைப்படங்கள் வெறும் பொழுதுபோக்காக இல்லாமல் ஆழமான அரசியல் சமூக ஆவணங்களாக மக்களைத் தட்டி எழுப்பிச் சுதந்திர வேட்கையை ஊட்டுமாறும் அரசியல் பிறழ்வுகளை தகர்த்தெறியவும், அரசியல் மாற்றங்களை உருவாக்கவும் வெளிவந்தன அரசியலினை திரைப்படங்களில் ஆழமாக வெளிப்படுத்துபவர் இயக்குனர் மணிரெத்தினம்.

உள்நாட்டு போரினை அடிப்படையாக் கொண்டு இனங்களுக்கிடையிலான முரண்பாடு, போர்க்களம், அதனால் ஏற்படும் இன்னல்கள் உயிர் இழப்புக்கள், உள்நாட்டு அரசியல் குழப்பங்கள் போன்றவற்றினை அடிப்படையாகக் கொண்டும் அடிமைப்படுத்துவதனாலும் ஏற்படும் பிரச்சினைகளையும், தீவிரவாதத்தின் தோற்றம் எவ்வாறு அமைகின்றது என்றும் இரண்டு நாடுகளுக்கிடையிலான எல்லைப்பிரச்சினை எவ்வாறு நாடுகளை பாதிக்கின்றது அதனால் ஏற்படும் அரசியல் குழப்பங்களை புலப்படுத்தும் விதமாகவும் அரசியலினை அடிக்கருத்தாகக் கொண்டு திரைப்படங்களை இயக்குனர் இயக்கியுள்ளமையை அவதானிக்கலாம்.

- **உள்நாட்டுப்போர்-**
  கண்ணத்தில் முத்திமிட்டாள்

- **நாடுகளுக்கிடையிலான எல்லைப்போர்-** ரோஜா

### 1.4.5 நட்பு

இயக்குனர் நட்பினை வெளிப்படுத்தும் விதமாகவும் திரைப்படங்களினை இயக்கியுள்ளார். நட்பின் முக்கியத்துவம், நண்பர்களுக்கிடையிலான ஒற்றுமை நட்புக்குத் தேவையான விடயங்கள் எவை என்பதினை புலப்படுத்தும் விதமாக நட்பினை அடிக்கருத்தாக கொண்டு திரைப்படங்கள் இயற்றப்பட்டுள்ளன.

எந்த விதமான இரத்த உறவும் இல்லாமல் உயிரைக் கொடுக்கும் அளவிற்கும் துணியும் ஓர் உறவு தான் நட்பு என்பதினை புலப்படுத்தும் விதமாக, நட்பினை அடிக்கருத்தாக்க கொண்டு திரைப்படங்களினை உருவாக்கியுள்ளார் இயக்குனர்.

### 1.4.6 திரைப்படங்களும் அடிக்கருத்தும்.

இயக்குனர் தனது திரைப்படங்களில்
ஐந்து வகையான அடிக்கருத்தினையே பயன்படுத்தியுள்ளார். அவை காதல், நட்பு, குடும்பம், சமுதாயம், அரசியல் போன்றவையாகும்.

| அடிக்கருத்து | திரைப்படங்கள் |
|---|---|
| காதல் | 08 |
| குடும்பம் | 02 |
| அரசியல் | 04 |
| சமுதாயம் | 04 |
| நட்பு | 01 |

## 1.5 நிறைவுரை

இயக்குனர் மணிரெத்தினத்தின் திரைப்படங்கள் சுருக்கமான வசனம், நேர்த்தியான தொழில்நுட்பம், தகுந்த அடிக்கருத்து போன்றன முக்கியமானவையாகக் கொண்டுள்ளன. திரைப்படத்தில் நடிப்பு, பாடல், இசை, எனப் பல்வேறு கூறுகள் இடம்பெற்றாலும் கதை முதன்மையாக வேண்டப்படுகின்றது. கதை என்பது நிகழ்ச்சிகள் பலவற்றின் பின்னலாக ஒரு மையக்கருத்தை அல்லது அடிக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு அமைவதாகும். இயக்குனர் தனது அடிக்கருத்தை சரியான காலத்தில் சரியான பொருளில் அமைப்பதினால் அவரின் திரைப்படங்கள் அதிகம் பேசப்படுகின்றன.

இயக்குனர் தனது திரைப்படங்களில் ஐந்து வகையான அடிக்கருத்தினையே பயன்படுத்தியுள்ளார். அவை காதல், நட்பு, குடும்பம், சமுதாயம், அரசியல் போன்றவையாகும். அடிக்கருத்துக்களே சிறந்த கதைக்களங்கள் உருவாகக் காரணங்களாக உள்ளன, ஓர் திரைப்படத்தின் தலைமைக் கருத்தே அதன் அடிக்கருத்தாக அமைகின்றது. தமிழ்த் திரைப்பட இயக்குனர் மணிரெத்தினம் திரைப்படங்களின் அடிக்கருத்துக்கள் குறித்து அதிக முக்கியத்துவம் செலுத்துகிறார் என்பது இந்த ஆய்வின் ஊடாக புலனாகிறது.

இந்த ஆய்வின் மூலம் இயக்குனரின் அடிக்கருத்து தெரிவு எவ்வாறு அமைகின்றது என்பதினையும், இயக்குனர் காதல் மற்றும் அரசியல் சார்ந்தே அதிகமாக அடிக்கருத்துக்களினை அமைத்துள்ளார் என்பதினையும் அறிய முடிகிறது.

### அடிக்குறிப்புக்கள்

1) Oxford English Mini Dictionary,(Sri Lanka Edition), 2007, (Edit) Cathsrine .S,Oxford University Press, Chennai,p.207.

2) க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி 2004, க்ரியா,சென்னை, ப.549.

### துணைநின்றவை

1) குமரன்தாஸ், 2008, தமிழ்த் திரையின் நிழல் அரசியலும் நிஜ அரசியலும், தோழன் வெளியீடு, சென்னை,

2) ஜெகதா,2004, காலத்தை வென்ற திரைப்படங்கள், ஸ்ரீ செண்பகா பதிப்பகம்,சென்னை.
3) கோவிந்தன்.க,1999, ஆய்வாளர் பார்வையில் திரைப்படக் கலை,குமரன் புத்தக இல்லம், கொழும்பு.
4) கல்யாணராம்.தி, சங்கர்.எஸ்.கே, 1991, உலக சினிமா சாதனையாளர்கள்-3, சலனம் இதழ்.3, டிசம்பர்.